
# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 10, சந்தர்ப்பம்கூறல்



தொகுப்பு: இ.க.சிவஞானசுந்தரம், எம்.ஏ
ஆசிரியர் கல்விவள ஆலோசகர்
மேல்மாகாணம்

## முன்னுரை.....

**தமிழ்மொழியும் இலக்கியமும் (சந்தர்ப்பம் கூறல்) தரம் 11** என்ற புதிய பாடத்திற்கான இப்பரீட்சை முன்னோடி வினாவிடைகள் மாணவர்கள் தேர்ச்சிசார் மதிப்பீட்டு அலகுப் பரீட்சைகளில், பொதுப் பரீட்சைகளில் அதிவிசேட சித்திபெற வழிவகுக்கும் என நம்புகிறேன். பாட உள்ளடக்கத்தில் தரம் 11 ற்கான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே முன்னோடி வினாவிடை, சந்தர்ப்பம் கூறல் என இரு நூல்களாக கட்டாய பாடம் தமிழ் இலக்கியத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

இரு தசாப்த கால அளவிலான கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டு அனுபவமும் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி வளம்சார் ஆலோசனை கூறும் தொழில்சார் அனுபவமும் ஒன்றிணைந்தே இப்பாடக் கல்விப் பணிக்கான இந் நூல்களை ஆக்கத் தூண்டிற்று எனலாம்.

பரீட்சையில் கேட்கப்படும் கேள்விக்கு மாணவர்கள் சுட்டிப்பாக விடை எழுதும் நோக்கமாகக் கிரகித்தல், மனனம் செய்தல் என்பவற்றை இலகுபடுத்தும் முகமாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் பலதரப்பட்ட வினாக்களுக்கான விடைகளைக் கொண்டுள்ளது. மாணவர் **தேர்ச்சி மட்டத்தை** அடைந்து விசேட சித்தி பெற இந்நூல் துணையாக அமையும் என நம்புகிறேன். ஆசிரியப் பெருந்தகைகளும், மாணவர்களும் இதனை வரவேற்பார்கள் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் கணனி ஆக்கம் செய்து உதவிய **SDS Computer Services** உறுப்பினர்களுக்கும் சிறந்த முறையில் அச்சில் பதித்து நூலுருவாக்கிய **'மாணவர் நகலகம்' (சென்னை)** உறுப்பினர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

**மாணவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் வியத்தகு முன்னேற்றம் அடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.**

வாழ்க தமிழ்மொழி. வளர்க தமிழ்மொழி

ஆசிரியர்

இ.க.சிவஞானசுந்தரம் **MA**

# உள்ளடக்கம்


பக்கம்

1. உவமை நயம் - பாடம் 1 .......... 01

2. இளையான்குடி மாறநாயனார் - பாடம் 2 .......... 03

3. இருட்டறை - பாடம் 4 .......... 07

4. திருமணிமாலை நமுறாது அழிவுண்ட படலம் - பாடம் 7 .......... 14

5. தேவ கிருபையை முன்னிட்டு வாழும் - பாடம் 8 .......... 17

6. குரு தரிசனப்படலம் - பாடம் 9 .......... 26

7. அறிவுடை நம்பி - பாடம் 11 .......... 30

8. மணிமேகலை - பாடம் 12 .......... 37

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தமிழ் இலக்கியத் தொகுப்பு - கட்டாயமானது

### புதிய பாடத்திட்டம் 2000

## தரம் 10-11

பூபாலசிங்கம் புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# சந்தர்ப்பம் கூறல்

☞ பரீட்சை உசாத்துணை நூல் வரிசையில் புதிய பரிமாணம்.

☞ க.பொ.த (சாதாரண)தரப் பரீட்சையில் விசேட சித்தி பெறுவதற்கான முன்னோடி வினாவிடை

தொகுப்பு: **இ.க. சிவஞானசுந்தரம்,**

**M.A (Cey), P.G.Dip.in Edu, B. A (Cey), Sp.Trd, ISA**

**ஆசிரியர் கல்விவள ஆலோசகர்,**

**மேல்மாகாணம்.**

**தென்றல் பப்ளிகேஷன், கொழும்பு.**

விலை:

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ

அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை இழந்தாய்

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவனுடைய தாகின்றது

மற்றொரு நாள், அது வேறொருவனுடைய தாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
(பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்)

# 1. உவமை நயம்

1. **"என் செய்தாய் திண்ணா நீ..."**

யாரால் :- காடன் என்ற வேடனால்

யாருக்கு :- திண்ணனாருக்கு

சந்தர்ப்பம் :- திண்ணனார் காளத்தி மலையின் இறைவனான குடுமித் தேவரைக் கண்டு அவரை அணைத்துக் கொண்டு வரமனமின்றி மலையில் நெடும் பொழுதைக் கழித்த பின் காலம் தாழ்ந்து வந்ததைக் கண்டு சினந்து கூறியபோது.

2. **"இவன் மலையில் தேவர் தம்மைக் கண்(டு) அணைத்துக் கொண்(டு)"**
**"வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு) என்ன என்ன நீங்கான்"**

யாரால் :- நாணனால் / நாணன் என்ற வேடனால்

யாருக்கு :- காடனுக்கு / காடன் என்ற வேடனுக்கு

சந்தர்ப்பம் :- திண்ணனார் காளத்திமலையில் இருந்து காலம் தாழ்ந்து வந்ததைக் கண்ட காடன் சினந்து என் செய்தாய் திண்ணா நீ? எனத் திண்ணனாரைக் கேட்டபோது அவர் அதைக் காதில் வாங்காத போது, பதிலாகக் கூறப்பட்டது.

3. **"மலைமேல் உள்ள குடுமித் தேவரை அணைத்துப் பிடித்துக் கொண்டு மரப் பொந்தைப் பற்றிக் கொண்டு விடாத உடும்பைப் போல் விடமாட்டேன் என்று தங்கிவிட்டான்"**

யாரால்:- நாணனால் / நாணன் என்ற வேடனால்

யாருக்கு :- காடனுக்கு / காடன் என்ற வேடனுக்கு

சந்தர்ப்பம் :- திண்ணனார் காளத்திமலையில் இருந்து காலம் தாழ்ந்து வந்ததைக் கண்ட காடன் சினந்து "என் செய்தாய்

திண்ணா நீ?" எனத் திண்ணனாரைக் கேட்டபோது அவர் அதைக் காதில் வாங்காதபோது, பதிலாகக் கூறப்பட்டது.

4. **"உழையா அறம் வற்றிட ஊழ் வழுவுற்ற சீற்றம் விளையாத நிலத்து, உனக்கு எங்ஙண் விளைந்தது?"**

யாரால் :- இராமனால் / இராகவனால்
யாருக்கு :- இலக்குவனுக்கு
சந்தர்ப்பம் :- தமையனுக்குக் (இராமனுக்கு) கிடைக்க வேண்டிய முடியைச் சிற்றன்னை கைகேயி ஏமாற்றிப் பறித்து விட்டாள் என்று எல்லையற்ற கோபம் காரணமாக இலக்குவன் கொதித்தெழுந்து பேசியபோது...

5. **"வாய் தந்தன பேசுதியோ மறை தந்த நாவால்"**
**"வேதத்தை ஓயாது பாராயணம் செய்கின்ற திருவாயால் வழங்கத்தகாத வார்த்தைகளை நீ பேசலாமா"**

யாரால்:- இராமனால்/இராகவனால்/கமலக்கண்ணனால்
யாருக்கு:- இலக்குவனுக்கு
சந்தர்ப்பம்:- தமையனுக்குக் (இராமனுக்கு) கிடைக்க வேண்டிய முடியைச் சிற்றன்னை ஏமாற்றிப் பறித்து விட்டாள் என்ற எல்லையற்ற கோபம் காரணமாக இலக்குவன் கொதித் தெழுந்து பேசியபோது கூறப்பட்டது.

6. **"சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊனை, நாயின் வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாளே!**
**"வெங்கண் நாயின் சிறு குட்டன்...."**

யாரால் :- இலக்குவனால்
யாருக்கு :- சிற்றன்னை கைகேயிக்கு
சந்தர்ப்பம் :- தமையனுக்குக் கிடைக்கவேண்டிய முடியைச் சிற்றன்னை கைகேயி ஏமாற்றிப் பறித்து பரதனை பெற வைத்தது எவ்வாறானது என எல்லையற்ற கோபத்தில் கூறியபோது.

7. **"மையோ, மரகதமோ, மறிகடலோ மழை முகிலோ..."**

யாரால் :- கம்பரால் / கவிச்சக்கரவர்த்தி கம்பநாடனால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- இலக்குவனுடனும், சீதையோடும் இராமன், காட்டில் நடந்து செல்கின்ற காட்சி அழகைக் கற்பனையில் கண்டு தன் ஆற்றாமையை வெளிப்படுத்தியபோது.

## 2. இளையான் குடிமாற நாயனார் புராணம்

1. **"..தபோதனர் தீர வேபசித் தார்செய்வ தென்.."**

யாரால்:- இளையான் குடிமாற நாயனாரால்
யாருக்கு:- பத்தினியாகிய மனைவிக்கு
சந்தர்ப்பம்:- நடராசப் பெருமான் தவவேடம் புரியும் தவசியாக, மழைக் காலத்தில் ஓர் இராத்திரி நேரம் மாறனாரது திருமாளிகைக்கு எழுந்தருளிய வேளையில் அவரின் ஈரத்தைப் போக்கி அமர ஆசனம் கொடுத்தபின் திருவமுது கொடுக்கும் விருப்பத்தினால் உந்தப்பட்டபோது கூறப்பட்டது.

2. **"நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்.."**

**"இனியவர் தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேஅணங் கே!"**

யாரால் :- இளையான் குடிமாற நாயனாரால்
யாருக்கு :- பத்தினியாராகிய மனைவிக்கு / மாறனாரின் பத்தினியாருக்கு
சந்தர்ப்பம் :- நடராசப்பெருமான் தவவேடம் புரியும் தவசியாக, மழைக்கால்தில் இராத்திரி நேரம் மாறனாரது திருமாளிகைக்கு எழுந்தருளிய வேளையில் இந்தத்

தவச்செல்வர் மிகுந்த பசியை உடையவராக இருக்கிறார். யாம் என் செய்வது? எனத் திருவாய் மலர்ந்து கூறியபின் தொடர்ந்து கூறியபோது.

3. **"..மற்றொன்றும் காண்கிலேன்**
**ஏதி லாரும் இனித் தரு வாரில்லை.**
**போதும் வைகிற்றுப் போம் இடம் வேறில்லை**
**தீது செய்வினை யேற்கென் செயல்"**

யாரால் :- மாறனாரின் பத்தினியாரால் / மாறனாரின் மனைவியாரால்

யாருக்கு :- இளையான் குடிமாற நாயனாருக்கு

சந்தர்ப்பம் :- நடராசப்பெருமான் தவவேடம் புரியும் தவசியாக வந்தபோது நம் இல்லத்தில் உண்பதற்கு உணவில்லை, எனினும் நடராசப் பெருமானாருக்குக் இனியவரான இந்த விருந்தினருக்கு இனிய திருவமுதைச் சமைக்கும் விதம் எவ்வாறு என இளையான் குடிமாற நாயனார் திருவாய் மலர்ந்தபோது கூறப்பட்டது.

4. **"செல்லல் நீங்கப் பகல்வித் திடசெந் நெல்**
**மல்லல் நீர்முறை வாரிக் கொடுவந்தால்**
**வல்ல வாறமு தாக்கலும் ஆகும்மற்**
**றல்ல தொன்றறியேன் என்று அயர்வுற"**
**!!மற்றல்ல தொன்றறியேன் என்றயர்வுற"**

யாரால் :- மாறநாயனாரின் பத்தினியாரால்/ இளையான் குடிமாற நாயனாரின் பத்தினியாரால்

யாருக்கு :- இளையான் குடிமாறநாயனாருக்கு

சந்தர்ப்பம் :- நம் இல்லம் வந்த நடராசப்பெருமானின் இனியவரான இந்த விருந்தினருக்கு திருவமுதைச் சமைக்கும் விதம் எவ்வாறு என மாறனார் கேட்டபோது கூறப்பட்டது.

5. **“வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை”**

யாரால் :- மாறநாயனாரின் பத்தினியாரால் / இளையான் குடிமாறநாயனாரின் பத்தினியாரால்

யாருக்கு :- இளையான்குடிமாற நாயனாருக்கு

சந்தர்ப்பம் :- வந்த அடியாரின் பசியைப் போக்க வயலுக்கு சென்று நெற்பயிர்முளைகளை கொண்டுவந்து மாறனார் கொடுத்த பின் அதனை உள்ளத்தால் விரும்பி ஏற்று நீரில் சேற்றினைக் கழுவி ஊற்றியபின் கூறப்பட்டது.

6. **“கறிக்கினி என்செய் கோம் என்றிறைஞ்சினார்..”**

யாரால் :- இளையான்குடிமாற நாயனாரின் மனைவியால்

யாருக்கு :- இளையான் குடிமாற நாயனாருக்கு.

சந்தர்ப்பம் :- திருவமுது சமைப்பதற்காக மாறனார் கொண்டுவந்த நெற்பயிர் முளைகளைச் சுத்தம் செய்து, நெல் விதைகளை அரிசியாக்கி உலையில் இட்டு இனிய சோறு சமைத்தபின் இவ்வாறு கூறப்பட்டது.

7. **“இணையிலா தாரை ஈண்ட அமுதுசெய் விப்போம்”**

யாரால் :- இளையான் குடிமாற நாயனாரின் மனைவியாரால்

யாருக்கு :- இளையான் குடிமாற நாயனாருக்கு

சந்தர்ப்பம் :- திருமாளிகைக்கு வந்த அடியவருக்குத் திருவமுது கொடுக்கும் விருப்பத்தினால் சோறு கறிகள் சமைத்தபின் விருந்தினருக்குத் திருவமுது கொடுக்க எதிர்ப் பார்த்திருந்தபோது கூறப்பட்டது.

8. **“அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால் எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுது செய்தருள்க..”**

யாரால் :- இளையான் குடிமாற நாயனாரால்

யாருக்கு :- விருந்தினருக்கு / அடியவருக்கு / முனிவர் வடிவில் வந்த நடராசப் பெருமானுக்கு / முனிவர் வடிவில் வந்த விருந்தினருக்கு

சந்தர்ப்பம் :- விருந்தினருக்குத் திருவமுது கொடுப்பதற்காகச் சமைத்து முடிந்தபின், ஒப்பில்லாத விருந்தினரை இங்கே எழுந்தருளச் செய்து திருவமுது செய்விப்போம் என மனைவியார் கூறக்கேட்டு மாறனார் அவரைத் துயில் எழுப்பியபோது.

9. **"அன்பனே! அன்பர் பூசை அளித்தநீ அணங்கினோடும்
எண்பெரும் உலகை எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க..."**

யாரால் :- நடராசப் பெருமானால்
யாருக்கு :- இளையான்குடிமாற நாயனாருக்கு
சந்தர்ப்பம் :- அடியேன் ஆழ்ந்திருந்த துன்பத்திலிருந்து விடுபட்டு உய்யும் வண்ணம் அடியேனிடம் எழுந்தருளிய பெரியவரே, விரைவில் எழுந்து திருவமுது செய்தருள்க என்று மாறநாயனார் கூறிய சமயத்தின்போது.

# 4. இருட்டறை

1. **"எனக் கென்னடி கொறைச்சல்? அறுவது வருசம் இந்த ஒலகத்தில சீவிச்சிட்டன். கடைசிக் காலத்துக்கு ஒரு மகன் இருக்கான் வேலையைப் பாரு"**

யாரால்:- கிழவி சகீனாவால் / சகீனாக் கிழவியால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- வாழ்க்கையில் நம்பிக்கையற்றுத் தளர்ந்து போகும் நேரங்களில் சொல்லிக்கொள்வது.

2. **"அடி! நாசமானவளே! இன்னும் விளக்கேத் தல்ல?"**
யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- தனக்குத்தானே

சந்தர்ப்பம்:- யாருக்காக இந்த உலகத்தில் இன்னும் கொஞ்சக் காலம் வாழவேண்டும் என்று நினைத்தாளோ, யாருடைய தைரியத்தை ஊன்று கோலாகக் கொண்டு வாழ்ந்தாளோ, அந்த மகன் அவள் வாழ்க்கையை அர்த்தமற்றது என்று சொல்லிவிட்டான் என்ற வார்த்தைகள் ஞாபகத்தில் வந்தபோது, முணுமுணுத்தபடி குடிசையுள் நுழைந்தபோதுதான் இரவாகி விட்டதை உணர்கிறாள் அவ்வேளையில் கூறப்பட்டது.

3. **"ரஸாக் சாப்பிட வருவானே! வந்தாலென்ன மதியச் சோறு இருக்குது திம்பான்"**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- செய்வதற்கு வேலை இல்லை. மனம் இருந்த நிலையில் எதையும் செய்ய ஊக்கம் இல்லை. கிழிந்த பாயை விரித்து உட்காந்திருந்தபோது...

4. **"வாய் புளிப்பேறிக் கிடக்குது வெத்தில போட்டு எவ்வளவு நேரமாச்சு?"**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- மகன் ரஸாக் அவள் வாழ்க்கையை அர்த்தம் அற்றது என்று சொல்லிவிட்டான் என்ற வார்த்தைகள் வந்து அவள் மனத்தில் தொல்லை கொடுத்தபோது, அவ் எண்ணத்தை மாற்றும் முயற்சியில் கால்களை நீட்டிச் சௌகரியமாக உட்கார்ந்திருந்தபோது.

5. **"நாசமாப் போன மொய்தீன் கடப் போயில எப்பவும் சருகுதான"**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- வாய்புளிப்பேறிக் கிடக்குது என வெற்றிலை போடுவதற்காக வெற்றிலை கூட்ட ஆரம்பித்தபோது.

6. **“போறன் உட்டுட்டு வேலயப்பாரு”**

**“அப்படித்தான் என்னத்தைச் சொல்லிவிட்டான”**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- வாய்புளிப்பேறியதால், வெற்றிலை போட்டுக்கொண்டு கால்களை நீட்டிப் படுத்திருந்த போது திரும்பவும் மகன் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்த சமயத்தில்.

7. **“என்னடா தம்பி! நேரங்காலத்தோட ஊட்டுக்கு வந்துட்டா?”**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- மகன் ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- மகன் ரஸாக் வீட்டிற்கு நேரங் காலத்தோடு வந்தபோது கேட்கப்பட்டது.

8. **“வராம என்ன செய்யச் சொல்ரா? மாடு மாதிரி ஒழைச்சாவும் புண்ணியமில்லை!”**

யாரால்:- ரஸாக்கால் / மகன் ரஸாக்கால்
யாருக்கு:- சகீனாக் கிழவிக்கு / கிழவி சகீனாவுக்கு / தாய் சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- என்னடா தம்பி! நேரகாலத்தோட ஊட்டுக்கு வந்துட்டா? எனத் தாய் கேட்டபோது.

9. **“ஏண்டா தம்பி கோபம்? யாருக்கிட்ட யாச்சும் சண்டகிண்ட போட்டுக்கிட்டு வந்தியா?”**

யாரால்:- கிழவி சகீனாவால் / சகீனாக் கிழவியால்
யாருக்கு:- மகன் ரஸாக்கிற்கு

சந்தர்ப்பம்:- என்னடா தம்பி! நேரங்காலத்தோட ஊட்டுக்கு வந்திட்டா? எனக் கேட்டதற்கு வராம என்ன செய்யச் சொல்ரா? மாடு மாதிரி ஒழைச்சாலும் புண்ணியமில்லை என அலுப்புடனும், கோபத்துடனும் ரஸாக் கூறியபோது.

10. ***"சண்டையா? அவன் மண்டைய ஒடச்சிருப்பங்கா தப்பிட்டான். மாட்டுக்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியாதவன்"***

யாரால்:- ரஸாக்கால் / மகன் ரஸாக்கால்
யாருக்கு:- சகீனாக் கிழவிக்கு / கிழவி சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- ஏன்டா தம்பி கோபம்? யாருக்கிட்ட யாச்சும் சண்டை கிண்ட போட்டுக் கிட்டு வந்தியா எனத் தாய் கேட்டபோது.

11. ***"ஏன்டா என்ன நடந்திச்சு.."***

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- மகன் ரஸாக்கிற்கு / ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- சண்டையா? அவன் மண்டய ஒடச்சிருப்பாங்கா தப்பிட்டான். மாட்டுக்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியாதவன் எனக் கோபமாகக் கூறியபோது.

12. ***"அவன்ட கொணந்தான் தெரியுமே! நாமேன்னத்துக்கு அவன்ட மாட்ட வெயிலில உட்ட?"***

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- என்ன நடக்கிறகா அவன்ட மாடு வெயிலில நிண்டுச்சாம் வாணத்துக்குக் கிளம்பறான் என்று ரஸாக் கூறியபோது.

13. ***"என்ன நடக்கிறகா? அவன்ட மாடு வெயிலில நிண்டுச் சாம் வாணத்துக்குக் கிளம்பறான்?"***
யாரால்:- ரஸாக்கினால் / ரஸாக்கால் / மகன் ரஸாக்கால்

யாருக்கு:- சகீனாக் கிழவிக்கு / தாய் சகீனாவுக்கு /
கிழவி சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- அவன்ட மண்டைய ஒடச்சிருப்பாங்கா தப்பிட்டான். மாட்டுக்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியாதவன் என ரஸாக் கூறியபோது ஏண்டா என்ன நடந்திச்சு எனத் தாய் கேட்டபோது.

14. **"அவன்ட கொணம் அவன்ட ஊட்டுல இருக்கட்டும்கா. மாடுதானா பெரிசு?"**

**"நானும்தான் விடிஞ்சா பொழுதுபட்டா வெளியில கெடக்கிறன் என்னப் பத்தி யோசிச்சானா?"**

யாரால்:- ரஸாக்கினால் / ரஸாக்கால் / மகன் ரஸாக்கால்
யாருக்கு:- சகீனாக்கிழவிக்கு / தாய் சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- அவன்ட கொணந்தான் தெரியுமே! நாமேன்னத்துக்கு அவன்ட மாட்ட வெயிலில உட்ட எனத் தாய் கேட்டபோது.

15. **"உம்.. நீ ஒலகம் தெரியாத புள்ள யாரைப் பத்தியும் யாரும் கவலப்பட மாட்டாங்க. நம்மப் பத்தி நாமதான் கவலப்படணும் வயிரொன்று இருக்குதே"**

யாரால்:- சகீனாக் கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- ரஸாக்கிற்கு மகன் ரஸாக்கிற்கு.
சந்தர்ப்பம்:- மாடுகளா பெரிசு, நானும்தான் விடிஞ்சா பொழுதுபட்டா வெயிலில கெடக்கிறன் என்னப் பத்தி யோசிச்சானா என மகன் கூறியபோது.

16. **"வயித்தப் பாத்தாப் போதுமா? மானத்தைக் காப்பாத்த வேணாமா?"**

யாரால்:- ரஸாக்கினால் / ரஸாக்கால்
யாருக்கு:- கிழவி சகீனாவுக்கு / தாய் சகீனாவுக்கு /
சகீனாக் கிழவிக்கு

சந்தர்ப்பம்:- நீ உலகம் தெரியாத பிள்ளை. யாரைப் பற்றியும் யாரும் கவலைப்படமாட்டாங்க. நம்மப் பத்தி நாமதான் கவலப்படனும் வயிரொன்று இருக்குதே எனத் தாய் கூறியபொழுது..

**17. "கோவம் பசிய ஆத்தாதுடா தம்பி! நீயென்ன செய்வா ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்"**

யாரால்:- சகீனாக்கிழவியால் / கிழவி சகீனாவால்
யாருக்கு:- ரஸாக்கிற்கு / மகன் ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- வயித்தப்பாத்தாப் போதுமா? மானத்தக் காப்பாத்த வேணாமா எனக் கோபத்துடன் மகன் கத்தியபோது.

**18. "ஓ! ஒனக்கு எல்லாந் தெரியும்....."**

யாரால்:- ரஸாக்கால் / ரஸாக்கினால் / மகன் ரஸாக்கால்
யாருக்கு:- சகீனாக்கிழவிக்கு / தாய் சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- கோபம் பசிய ஆத்தாதுடா தம்பி! நீயென்ன செய்வா ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான் எனக் (தாய்) கிழவி கூறியபோது.

**19. "இன்னொரு தரம் சொல்லுடா மகனே! நானென்ன ஒலகம் தெரியாதவளா?"**

யாரால்:- கிழவி சகீனாவால் / தாய் சகீனாவால் / சகீனாக்கிழவியால்
யாருக்கு:- ரஸாக்கிற்கு / மகன் ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- ஓ! ஒனக்கு எல்லாம் தெரியும் என்று மகன் அலுத்துக் கூறிய சந்தர்ப்பத்தில்.

**20. "ஒலகம் தெரிஞ்சதுனால தாங்கா ஒனக்கு இந்தக் கேடு"**
யாரால்:- ரஸாக்கினால் / ரஸாக்கால் / மகன் ரஸாக்கால்
யாருக்கு:- கிழவி சகீனாவுக்கு / தாய் சகீனாவுக்கு / சகினாக் கிழவிக்கு

சந்தர்ப்பம்:- இன்னொரு தரம் சொல்லுடா மகனே! நானென்ன ஒலகம் தெரியாதவளா எனத்தாய் பெருமிதத்துடன் கேட்டபோது வெறுப்புடன் கூறியது.

21. **"எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த ஒலகத்தில அறுவது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னப் போல கொழந்தயா நான்?"**

யாரால்:- கிழவி சகீனாவால் / சகீனாக் கிழவியால்
யாருக்கு:- மகன் ரஸாக்கிற்கு / ரஸாக்கிற்கு
சந்தர்ப்பம்:- நானென்ன ஒலகம் தெரியாதவளா? எனப் பெருமிதத்தோடு கேட்ட கிழவிக்கு ஒலகம் தெரிஞ்சதுனாலை தாங்கா ஒனக்கு இந்தப் கேடு என்று ஒரு வெறுப்போடு மகன் ரஸாக் கூறியபோது பதிலாகக் கூறப்பட்டது.

22. ***"கிழவியோட பேசி முடிவு காண முடியாது"***

யாரால்:- ரஸாக்கால்
யாருக்கு:- தனக்குத்தானே
சந்தர்ப்பம்:- எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த ஒலகத்தில் அறுவது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னப் போல கொழந்தையா நான்? என இறுமாப்போடு கூறிய கிழவியின் வார்த்தையைக் கேட்டபோது (தனக்குள்)

23. ***"ஒலகம் தெரிஞ்ச மாதிரிப் பேசுரியே, ஒண்ட முகம் உனக்குத் தெரியுமாகா?"***

யாரால்:- மகன் ரஸாக்கால் / ரஸாக்கினால்
யாருக்கு:- கிழவி சகீனாவுக்கு / தாய் சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- ஒன்னப் போல கொழந்தயா நான்? என இறுமாப்போடு கேட்ட கிழவியோடு பேசி முடிவு காண முடியாது என்ற முடிவுக்கு வந்தபோது கேட்டது.

24. **"உம்மா! இங்கப்பாருங்க இதுக்குள்ள ஒரு புள்ள"**

யாரால்:- குழந்தை சகீனாவால் / சகீனாவால்
யாருக்கு:- சகினாவின் தாய்க்கு / சகீனாவின் உம்மாவுக்கு
சந்தர்ப்பம்: தந்தையார் கொண்டு வந்த கண்ணாடியில் சகீனா முகத்தைப் பார்த்தபோது தன்னைப் போல ஒரு குழந்தை கண்ணாடியுள் இருந்து பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியத்தால், சகீனா அதை எடுத்துக் கொண்டு தாயிடம் சென்று கூறியது.

25. **"பொண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பார்க்கக் கூடாதுடி!"**

யாரால்:- சகீனாவின் தாயால் / சகீனாவின் உம்மாவால்
யாருக்கு:- குழந்தை சகீனாவுக்கு / சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- கண்ணாடியினுள் தன்னைப் போன்ற குழந்தை இருப்பதைக் கூறியபோது தாய் கண்ணாடியைப் பறித்துக் கொண்டபின்பு கூறியது.

26. **"ஏனும்மா?...."**

யாரால்:- குழந்தை சகீனாவால் / சகீனாவால்
யாருக்கு:- சகீனாவின் தாய்க்கு / சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- பொண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பாக்கக் கூடாதுடி என்று தாய் கூறியபோது.

27. **"சொன்னாக் கேளு சகீனா! ஆகாதென்டா ஆகாது தான்: வாய் மூடிக்கிட்டு பேசாமப் போ!"**

யாரால்:- சகீனாவால் / சகீனாவின் தாயால் / சகீனாவின் உம்மாவால்
யாருக்கு:- குழந்தை சகீனாவுக்கு / சகீனாவுக்கு
சந்தர்ப்பம்:- பொண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பாக்கக் கூடாதுடி எனத்தாய் கூறியபோது, ஏனும்மா என மகள் அழுது கொண்டு கேட்டபோது.

## 7. திருமணிமாலை - நமுறூது அழிவுண்ட படலம்.

1. **"மறத்துறை நின்றாய் நானு மாதவ முயல்வா னாக**
**வறத்துறை விளக்கு மென்ற னாண்டகை தகையவல்ல**
**திறத்துறை நின்றன் சிந்தை தோற்றுவா னெவ்வா றாகப்**
**புறத்திறங் கண்டா**
**யென்னைப் பொறித்திட..."**

யாரால்:- இப்ராஹீம் நபி (அலை) அவர்களால்
யாருக்கு:- நமுறூதிற்கு
சந்தர்ப்பம்:- மடமைத் தனத்தில் மூழ்கி மிகவும் சிரமத்துடன் பாடுபட்டு அதனால் வருந்தி தேர்ச்சி பெற்ற துணைவர்கள், மற்றும் படைவீரர்களும், தலைவர்கள், அரசர்கள் சூழ நமுறூது மணிப்பீடத்தில் அமர்ந்திருந்தபோது, அவரைப் பார்க்க வள்ளலாகிய நபி சென்றபோது கூறியது.

2. **"...தற்செறி யிறைவ னாவித் தாவியென் சரமே யுண்ட**
**திற்செறிந் துற்றேன்பின்னர் சரதமீ தென்று சொற்றான்"**

யாரால்:- நமுறூதால் / நமுறூதினால்
யாருக்கு:- இப்ராஹீம் நபி (அலை) அவர்களுக்கு
சந்தர்ப்பம்:- தருமமற்ற செயல்களிலே நின்றுகொண்ட உனக்கு அறவழிகளை விளக்கும் எனது இறைவனின் திறமை உனது மனத்தில் தோன்றியதால் நீ தோல்வி கண்டாய். எவ்வாறு தோல்வி கண்டாய் எனக் கூறுவாயா? என வள்ளல் நபி அவர்கள் கேட்டபோது பதிலாகக் கூறப்பட்டது.

3. **“செறிதரு மவய வங்கள செயற்கையு மியற்கை**
**தாஹும் குறிதர வுணர்ந்து கோடல் தன்குணந்**
**தெரிதல் கொண்ட வறிவுமே நின்பா லின்று....”**

**“..ஆண்டகை யவனைக் கொன்றே**
**னெறி தர வென்று நின்சர னிலையன்று...”**

யாரால்:- இப்றாஹீம் நபி (அலை) அவர்களால்
யாருக்கு:- நமுறூதுக்கு
சந்தர்ப்பம்:- என் இறைவனின் வல்லமையைக் கண்டாயல்லவா? எனக் கேட்டதற்கு உனது இறைவனது உயிரை எனது அம்பு பாய்ந்து சென்று உண்டது என நமுறூது கூறியபோது; எனது இறைவனுக்கு உடல் அவயவங்கள் இல்லை எனக் கூறியபோது..

4. ஆ) **“எனக்குறுந் தகுதி தந்த வியல்புறும் வல்ல நாயன்**
**றனைக்குறும் வண்மை யெம்மோர் சாற்றுதற் கரிய**
**காண்டும்..”**

ஆ) **“...ஆண்டகையவனைக் கொன்றே**
**னெறி தர வென்று நின்சொ னிலையன்று.....”**

யாரால்:- இப்றாஹீம் நபி (அலை) அவர்களால்
யாருக்கு:- நமுறூதுக்கு / நமுறூதிற்கு
சந்தர்ப்பம்:- இறைவனது உயிரை அம்பு பாய்ந்து சென்று உண்டது என நமுறூது கூறியபோது, இறைவனுக்கு உடலோ அவயவங்களோ இல்லை ஏன் பிதற்றுகிறாய் எனக்கூறித், தொடர்ந்து இவ்வாறு கூறியது.

5. **“நின்றுணை நாயகன் றன்பா னெருங்கியே யாரு மெய்ப்ப**
**வென்றியே கொண்ட யாரினென் வீரமே காண வேண்டிற்**
**றுன்றுநின் சேனை யோடும் வருகென......”**

**“..யாரினென் வீரமே காணவேண்டிற்**
**றுன்றுநின் சேனை யோடும் வருகெனத்**
**துணைக்கண்சேப்ப**
**வன்றிற வரசன் சொற்றான்...”**

யாரால்:- நமுறூதால் / நமுறுதினால்
யாருக்கு:- இப்றாஹீம் நபி (அலை) அவர்களுக்கு
சந்தர்ப்பம்:- என்னுடைய இறைவனின் சிறப்பை எங்களால் கூறமுடியாது ஆகவே படைகளோடு பெரும் போர்க் களத்துக்கு வந்து என்னுடன் கொடிய போர் செய்வாயாக, என வள்ளல் நபி கேட்டதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

6. **“...தன்றை சென்ன நீர்சூழ் தரணியே வளைந்துமாறு**
**மொன்னல ரிவரென் றாய்ந்து வலியுற மசகுமுற்றப்**
**பன்னுனிப் படைக்கு ழாங்கள் விடுத்தனன்...”**

யாரால்:- இறைவனால்
யாருக்கு:- விரிந்து வாயையுடைய இடிக்கு
சந்தர்ப்பம்:- இறைவனின் ஏவலின்படி செயற்படும் மலக்குகள் மேகக் கூட்டத்தைக் கரிய வண்ணம் கொள்ளுமாறு பணித்தபோது, வஞ்சக நெஞ்சத்தை உடையவர்கள் எல்லோரையும் இக் கரியமேகம் சூழ்ந்த போது இவ்வாறு கட்டளையிடப்பட்டது.

# 8. தேவ கிருபையை முன்னிட்டு வாழும்!

1. **"எப்பவும் இப்படித்தான்ஞ ஆரு செத்தாலும் சாகு முந்தி விசேஷமான காரியம் ஏதும் நடக்கும்...."**

யாரால் :- சட்டம்பியரால்
யாருக்கு :- செத்த வீட்டுக்கு வந்திருப்பவர்களுக்கு
சந்தர்ப்பம் :- கிழவியின் செத்த வீட்டுக்கு வந்திருப்பவர்கள் சாகு முன்னர் நடந்த சிறு சம்பவத்தைப் பேசிக் கொண்டிருக்கும் போது இவ்வாறு தத்துவம் கூறப்பட்டது.

2. **"ஆச்சி எப்படிச் சுகம்?" "அது செய்வேன் இது செய்வேன்..."**

யாரால் :- கிழவியின் பையனால் / கிழவியின் மகனால்
யாருக்கு :- கிழவிக்கு / தாய்க் கிழவிக்கு / அந்தோக் கிழவிக்கு
சந்தர்ப்பம் :- கிழவியின் பையன் சின்ன வயசிலேயே வீட்டை விட்டு ஓடியவன்; மூன்று நாலு வருஷங்களுக்கு முந்தித் திடீரென்று வீட்டுக்கு வந்து தங்கிய வேளையில் கூறியது.

3. **"புட்டு அவிச்சாச்சடா மோனே! போய் மூஞ்சியைக் கழுவிற்று வா...!!"**

யாரால் :- ஆச்சியால் / தாய்க் கிழவியால் / கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- மகனுக்கு / பையனுக்கு
சந்தர்ப்பம் :- சின்ன வயசிலேயே வீட்டை விட்டு ஓடியவன் மூன்று நாலு வருஷங்களுக்கு முந்தித் திடீரென வீட்டுக்கு வந்து தங்கிய வேளையில் கூறப்பட்டது.

4. **"எனக்குப் பழங்கறிச் சட்டிக்குள்ள போட்டு வைச்சிற்று நீ சாப்பிடு. நான் ஒரு ஆளைப் பாத்திற்று வரவேணும்"**

யாரால் :- மகனால் / கிழவியின் மகனால்
யாருக்கு :- ஆச்சிக்கு தாய்க்கிழவிக்கு
சந்தர்ப்பம் :- வீட்டில் கிழவியோடு தங்கிய மகனுக்குப் புட்டு அவிச்சாச்சடா மோனே! போய் மூஞ்சியைக் கழுவிற்று வா!! எனக் கூறியதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

5. **"அவசரமாகத் தந்தி வந்து போறதாக உன்ர மகன் உன்னட்டச் சொல்லச் சொன்னார் ஆச்சி. போய்க் காயிதம் போடுவாராம்..."**

யாரால் :- தபாற்காரச் சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- கிழவிக்கு / அந்தோக் கிழவிக்கு
சந்தர்ப்பம் :- கிழவியோடு தங்கிய மகன் எனக்குப் பழங்கறிச் சட்டிக்குள்ள போட்டு வைச்சிற்று நீ சாப்பிடு நான் ஒரு ஆளைப் பாத்திற்று வரவேண்டும் என்று கூறியதன் பின்பு போனான், போனபின் மூன்றாம் நாள் இவ்வாறு கூறப்பட்டது.

6. **"காகிதமா போடுவாராம்" அவன்ர ஆள்ப்பேருக்குப் போடச்சொல்லு. புழுக்கைப் பயலுக்கு வந்து சொல்லிற்றுப் போக நேரமில்லை"**

**"அதுசரி, அவன்ர அப்பனும் இப்படித்தானே ஓடிப்போனவன்"**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- தபாற்காரன் சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- கிழவியின் மகன் வீட்டிலிருந்து போய் மூன்றாம் நாளின் பின்பு, "அவசரமாகத் தந்தி வந்து போறதாக உன்ர மகன் உன்னட்டச் சொல்லச் சொன்னார் ஆச்சி, போய்க் காயிதம் போடுவாராம் என்று தபாற்காரன் சங்கரப்பிள்ளை கூறியபோது பதிலாகக் கூறப்பட்டது.

7. **"காகிதம் போடுறன் என்று சங்கரப்பிள்ளை யட்டச் சொல்லிற்றுப் போனானாமே"**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- தனக்குத்தானே
சந்தர்ப்பம் :- அவசரமாகத் தந்தி வந்து போன மகன் காயிதம் போடுவான் எனத் தபாற்காரன் கூறியதை எண்ணி வேப்பமரத்து நிழலில் இருந்து தபாற்காரனைக் காத்திருந்தபோது தனக்குள் இவ்வாறு எண்ணியது.

8. **"எனக்குக் காயிதம் இருக்கா தம்பி"**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- தபாற்காரன் சங்கரப்பிள்ளைக்கு, சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- காயிதம் போடுறன் என்று சொன்ன மகனின் காயிதம் வருமென்று வேப்பமரத்தடியில் காத்திருந்து தபாற்காரனிடம் கேட்டது.

9. **"காயிதம் இல்லையா தம்பி"**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- தபாற்காரன் சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- காயிதம் போடுறன் என்று சொன்ன மகனின் கடிதம் வருமென்று எதிர்பார்த்துத் தபாற்காரனிடம் எனக்குக் காயிதம் இருக்கா தம்பி? எனக் கிழவி கேட்டதன் பின்பு ஒரு நாளின் பின்பும் ஒரு வாரத்தின் பின்பும் இவ்வாறு கேட்டது.

10. **"ஒன்று மில்லையாடா மோனே"**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகனின் காயிதம் வருமென்று தபாற்காரச் சங்கரப்பிள்ளையிடம் காயிதம் இல்லையா தம்பி என்று கேட்டு இல்லையாச்சி என்று கூறிய ஒரு மாதத்தின் பின் கேட்டபோது.

11. **“இல்லையா மோனே?”**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகனின் காயிதம் வருமென்று எண்ணி சிலமாதங்களின்பின் “ஒண்ணுமில்லையாடா மோனே” என்று கேட்டபின் சொந்தங் கொண்டாடி, பணிவாகக் கேட்டால் கடிதம் கிடைக்கும் என்ற நப்பாசையில் கேட்டபோது.

12. **“இல்லைய்ரச்சி”**

யாரால் :- தபாற்காரச் சங்கரப்பிள்ளையால் சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- கிழவிக்கு / அந்தோக்கிழவிக்கு
சந்தர்ப்பம் :- மகன் கடிதம் போடுவான் என்று காத்திருந்து தபாற்காரனிடம் கேட்டபோதெல்லாம் இவ்வாறு கூறியது.

13. ***“இருந்தா தராமல் விடுவமா? சும்மா அலட்டுறியே”***

யாரால் :- தபாற்காரச் சங்கரப்பிள்ளையால்/சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- கிழவிக்கு அந்தோக்கிழவிக்கு
சந்தர்ப்பம் :- மகன் கடிதம் போடுவான் என்று காத்திருக்கும் கிழவி பலமுறை கேட்டபோதெல்லாம் ‘இல்லையாச்சி’ எனக் கூறிய தபாற்காரன், சில மாதத்தின் பின் கிழவி மீண்டும் கேட்டபோது கூறியது.

14. ***“ஆரு? சங்கரப்பிள்ளையா? காயிதம் இல்லையா மோனே? “***

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு / சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகனின் காயிதம் வருமென்று எண்ணிப் பலமுறை தபாற்காரனிடம் கேட்டு, இருந்தா தராமல் விடுவமா? சும்மா அலட்டுறியே எனத் தபால்காரன் கூறிக் காலம் பலபோன பின், கண் பார்வை மங்கியபின் கேட்டது.

15. **“காயிதம் இல்லையாடா மோனே?**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு / சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- சைக்கிளில் போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோரிடமும் மகனின் காயிதம் வருமென்று எண்ணியிருந்த கிழவி கண் பார்வை மங்கியபின் இவ்வாறு கேட்டபோது.

16. **“சுகமில்லையாம்..”**

யாரால் :-சந்திக்கடைச் சூசைப்பிள்ளையால்/சூசைப்பிள்ளையால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு / சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகனின் கடிதம் வருமென்று மரநிழலில் காத்து இருக்கும் கிழவியைத் தரிசித்த கோயில் காணாமல் போனது போல் மூன்று நாட்களாக காணாததால் தபாற்காரன் விசாரித்தபோது கூறியது.

17. **“ஆச்சி”**

யாரால் :-தபாற்காரச் சங்கரப்பிள்ளையால் / சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- கிழவிக்கு / அந்தோக் கிழவிக்கு
சந்தர்ப்பம் :- மரநிழலில் கிழவியைக் காணாது வீட்டுக்குள் நுழைந்தபோது வெறுந்தரையில் விரித்த சேலைத் தலைப்பில் கிடந்த கிழவியைக் கண்டபோது இவ்வாறு பலமாக அழைத்தபோது.

18. **“ஆரது”**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு / சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- வெறுந்தரையில் விரித்த சேலைத் தலைப்பில் கிடந்த கிழவியை நோக்கி ஆச்சி என்று பலமாகக் கூப்பிட்டபோது பதில் கிடைக்காததால் தொட்டு அசைத்தபோது இவ்வாறு கூறியது.

19. **"நான்தான் சங்கரப்பிள்ளை"**

யாரால் :-சங்கரப்பிள்ளையால் / தபாற்காரச் சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- கிழவிக்கு / அந்தோக் கிழவிக்கு
சந்தர்ப்பம் :- வெறுந்தரையில் விரித்த சேலைத் தலைப்பில் கிடந்த கிழவியை ஆச்சி எனக் கூப்பிட்டுப் பதில் கிடையாத நிலையில் தொட்டு அசைக்க 'ஆரது' என்ற முனகல் சத்தம் கேட்டபோது பதிலாகக் கூறப்பட்டது.

20. **"காயிதமா?"**

யாரால் :- கிழவியால் / அந்தோக்கிழவியால்
யாருக்கு :- சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- கிழவியைத் தொட்டு அசைத்த நிலையில் 'ஆரது' என்ற முனகல் சத்தம் கேட்டபோது நான்தான் சங்கரப்பிள்ளை எனக் கூறிய வேளையில்.

21. **"எடிபுள்ள, காயிதக் காரன் போவான் பாரடி"**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தனக்குத்தானே (பிதற்றுதல்)
சந்தர்ப்பம் :- சுகயீனமுற்ற கிழவி படுக்கையில் கிடந்தபடி கூறியது

22. (அ) **"காயிதக்காரன் பாரடி"**

(ஆ) **"காயிதக்காரன் போவான் பாரடி"**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்
யாருக்கு :- தனக்குத்தானே (பிதற்றுதல்)
சந்தர்ப்பம் :- சுகயீனமுற்றிருந்த கிழவியின் பிதற்றல் அதிகரித்துக் குலப்பன், உதறல், சன்னி வந்தபின் உபதேசியால் வந்து அவஸ்தை கொடுத்தபின் பின்பு சங்கரப்பிள்ளை வெறுங்கையாகத் தினமும் வந்து போனபோது கூறியது.

23. **"கிழவி இரண்டு நாளாய் இழுத்துக் கொண்டு கிடக்குது சீவன் போக இவ்வளவு நேரம் பிடிச்சதை நான் எங்கேயும் காணேல்ல"**

யாரால் :- செல்லம்மாவால்

யாருக்கு :- அயல் வீட்டுக்காரப் பெண்களுக்கு

சந்தர்ப்பம் :- கிழவிக்கு குலைப்பனும், உதறலும், சன்னியுமாம் செவத்தியார் கோயில் சுவாமி வந்து அவஸ்தை கொடுத்தபின்பு அயல்வீட்டுக்காரர் எல்லோரும் கிழவியைச் சுற்றியிருந்தபோது கூறியது.

24. **"என்ன பேச்சடி செல்லம்மா? போற நேரம் வரமுந்தி உயிர்போக முடியுமா? மகன்ர காயிதம் கண்டு தான் கிழவிக்குச் சீவன் போகும்போல இருக்கு"**

யாரால் :- சுற்றியிருக்கும் பெண்டுகளில் ஒருவரால்

யாருக்கு :- செல்லம்மாவுக்கு

சந்தர்ப்பம் :- சுற்றியிருந்த அயல் வீட்டுக்காரர்களுக்கு கிழவி இரண்டு நாளாய் இழுத்துக் கொண்டு கிடக்குது. சீவன் போக இவ்வளவு நேரம் பிடிச்சதை நான் எங்கேயும் காணேல்ல என்று செல்லம்மா கூறியபோது.

25. **"காயிதம் வரும் பாரடி"**

யாரால் :- கிழவியால் / அந்தோக் கிழவியால்

யாருக்கு :- தனக்குத்தானே

சந்தர்ப்பம் :- கிழவி இழுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து போற நேரம் வரமுந்தி உயிர்போக முடியுமா? மகன்ர காயிதம் கண்டுதான் கிழவிக்குச் சீவன் போகும்போல இருக்கு எனப் பெண்டுகளில் ஒருத்தி கூறியதன்பின், மறுநாள் விடிந்தபின்பு இவ்வாறு கூறியது.

26. **"மகன்ர காயிதம் ஆச்சி"**

யாரால் :-தபாற்காரச் சங்கரப்பிள்ளையால் / சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- அந்தோக் கிழவிக்கு / கிழவிக்கு
சந்தர்ப்பம் :- போற நேரம் வரமுந்தி உயிர்போக முடியுமா? மகன்ர காயிதம் கண்டுதான் கிழவிக்கு சீவன் போகும்போல இருக்கு என்று பெண்டுகளில் ஒருத்தி கூறியதன் பின் மறுநாள் காகிதக் கட்டில் இருந்து கடிதம் ஒன்றை எடுத்துக் கிழவியின் கைக்குள் வைத்தபோது கூறியது.

27. **"என்னைப் பெத்த பாக்கியமே"**

யாரால் :- சுற்றியிருந்த பெண்டுகளுள் ஒருத்தியால்
யாருக்கு :- தனக்குத்தானே
சந்தர்ப்பம் :- "மகன்ர காயிதம் ஆச்சி என்று தபாற்காரன் கிழவியின் கைக்குள் கடிதத்தை வைத்தபோது, அதனைக் கண்ணில் ஒற்றியபின் கிழவியின் கையில் இருந்து கடிதம் நழுவிக்கீழே விழ, மாணிக்கம் பாட்டி கிழவியின் கண்களையும், வாயையும் பொத்தியபோது....

28. **"ஆர் செத்தது?"**

யாரால் :- ஒருவரால்
யாருக்கு :- சூசைப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- கிழவியின் மகனுக்குத் தந்தியடிக்கப் போனபோது.

29. **"உந்த அந்தோக்கிழவி...."**

யாரால் :- சூசைப்பிள்ளையால்
யாருக்கு :- யார் செத்தது எனக் கேட்டவருக்கு
சந்தர்ப்பம் :- தந்தியடிக்கப்பபோனபோது யார் செத்தது? எனக் கேட்டதற்குப் பதிலாகக் கூறியது.

**30. "சன்னியாய்க் கிடந்த கிழவி! சுறுக்கு எடுக்க வேணும்"**

யாரால் :- கிழவியின் செத்தவீட்டுக்கு வந்த ஒருவரால்
யாருக்கு :- செத்த வீட்டுக்கு வந்திருப்பவர்களுக்கு
சந்தர்ப்பம் :- மகன் வரவைப் பார்த்து சவம் எடுப்பது தாமதமாகியபோது. அப்போது கூறப்பட்டது.

**31. "கிழவியட மகன்ர விலாசமென்ன? அந்தக் காயிதத்தைக் காணயில்ல. நான் சும்மா தந்தியடிச்சன் எண்டு சொல்லீற்றன்"**

யாரால் :- சூசைப்பிள்ளையால்
யாருக்கு :- தபாற்காரச் சங்கரப்பிள்ளைக்கு/ சங்கரப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகன் வரவைப் பார்த்துச் சவம் எடுப்பது தாமதமானதால் வந்திருப்பவர்கள் அலுத்து விடவும், பொறுமை சோதனைக்குள்ளாகியும் இருந்தபோது கூறியது.

**32. "எனக்குத் தெரியாது சூசைப்பிள்ளை, மகன் காயிதம் அனுப்பயில்லை. அது என்ர வேலை"**

யாரால் :- சங்கரப்பிள்ளையால் / தபாற்காரச்சங்கரப்பிள்ளையால்
யாருக்கு :- சூசைப்பிள்ளைக்கு
சந்தர்ப்பம் :- மகன் வரவை எதிர்பார்த்துச் சவம் எடுப்பது தாமதமானபோது, சூசைப்பிள்ளை "கிழவியட மகன்ர விலாசமென்ன? அந்தக் காயிதத்தைக் காணயில்ல. நான் சும்மா தந்தியடிச்சன் என்று சொல்லீற்றன்" என்று கூறியதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

**33. "அவன் இனி எங்கே வரப்போறான் சவத்தை எடுப்பம்."**
யாரால் :- சூசைப்பிள்ளையால்
யாருக்கு :- செத்தவீட்டில் நிற்பவர்களுக்கு
சந்தர்ப்பம் :- மகன் கிழவிக்குக் காயிதம் அனுப்பயில்ல, 'அது என்ர வேலை' எனச் சங்கரப்பிள்ளை கூறியதைக் கேட்டுத் திகைப்படைந்து; பின் சமாளித்துக் கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்தபோது கூறியது.

# 9. இரட்சணிய யாத்திரீகம்

1. ***"யாரைநீ யவலிக் கின்றனை...."***
***"பெருகு மித் துயருனக் குற்ற பெற்றியென்..."***
***"திருகலில் சிந்தையாய் செப்பு.."***

யாரால் :- குருவானவரால்/நற்செய்தியாளனால்/சுவிசேஷகனால்
யாருக்கு :- ஆத்தும விசாரிக்கு / ஆன்மீகனுக்கு
சந்தர்ப்பம் :- ஆத்தும விசாரியானவன் சஞ்சலமடைந்து நித்திய ஜீவனை நாடி இங்கே களைப்புற்ற சரீரம் என்று சொல்லும் வண்ணம் பைத்திய காரனைப்போன்று கழித்தபோது, மெய்ப் புண்ணியமாக சுவிஷேகன் வந்தபோது கூறியது.

2. ***"ஐயகேள் நாசதே சத்த னாங்கமர்***
***வெய்யரில் வெய்யன்யான்.."***

ஆ. "...வெகுளித் தீவிழுந்தொய்யென விவணெலா மொருங்க
விந்தபின் மெய்யுற வருநடுத் திர்வை வேந்தனால்"

ஆ. "ஆயிடைக் கருணைவேந் தாணை மீறிய
தீயரைத் தீச்சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூ லியம்புகின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தினேன்.."

இ. "நன்றிகொன் றிறைவனை மறந்து நாடொறும்
புன்றொழில் புரிந்துவீண் பொழுது போக்கிய
வன்றலைப் புலையனேன் மருவு தண்டனைக்
கின்றுநின் றிரங்குவ தியாவ தாம்..."

ஈ. "சாகவும் மனமிலைத் தண்டனைக் கெதிர்
போகவுந் துணிவிலைப் புறத்து ளாரைப்போல்
ஏகவும் புகலிலை யீடு செய்யவோர்
பாகமும் பலமிலைப் பதைக்கின்றான்"

யாரால் :- ஆத்தும விசாரியால் / ஆன்மீகனால்
யாருக்கு :-குருவானவருக்கு/நற்செய்தியாளனுக்கு/விசேஷகனுக்கு
சந்தர்ப்பம் :- ஆத்தவிசாரிக்கு அருகிற்சென்று நீயார்! ஏன் வருந்துகிறாய்? பெருகிக் கொண்டிருக்கும் இத் துன்பமானது உன்னிடத்தில் வந்த தன்மை என்ன? எனக்குச் சொல்லுக என சுவிசேஷகனால் கேட்கப்பட்டதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

3. **"..மருவு மிம்மையில்**
**எஞ்சுறா வேதனை யியைதல் கண்டுமேன்**
**அஞ்சுதி சாவதற்கு..."**

யாரால் :- சுவிசேஷகனால்/குருவானவரால்/நற்செய்தியாளனால்
யாருக்கு :- ஆன்மீகனுக்கு / ஆத்தும விசாரிக்கு
சந்தர்ப்பம் :- நான் நாசதேசத்திலிருக்கின்றவன் அங்குள்ள கொடியர்கள் யாவருள்ளும் கொடியவன் யான் இறைவனை மறந்து நாடொறும் இழிந்த காரியங்களைச் செய்து வீண் பொழுது போக்கிய கொடிய புலையனாகிய நான் வருந்திப் பதைக்கின்றேன் என ஆன்மீகன் கூறியபோது.

4. அ. **"ஜென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை**
**எம்முது குளுக்குற விறுத்ததால்..."**

**"புலைக் கன்மிகள் குழுமுதீக் கடற்கி டங்கிடை**
**அம்மையி லமிழ்துமென் றஞ்சு கின்றனன்"**

ஆ. **"பல கலை கற்றுணர் பரம யோகியிவ்**
**வுலகமன் னவரெமை யொறுத்தற் கஞ்சுதும்.."**

**"நிலவுல கியாவையு நிறுத்த நீதிமன்**
**அலகறு தண்டனைக் கஞ்சிடோம்..."**

இ. **"வளைபொலன் கழலினாய்"**
**இனைய சிந் தனையென திதய்த் தூன்றலால்**
**வருந்துவேன்.."**

யாரால் :- ஆன்மீகனால் / ஆத்தும விசாரியால்
யாருக்கு :- சுவிசேஷகனுக்கு / நற்செய்தியாளனுக்கு
சந்தர்ப்பம் :- கூறியவை அனைத்தும் நிகழும் இம்மையில் குறைவுபடாத வேதனை உண்டாக்குவதைக் கண்டும் சாவதற்கு ஏன் பயப்படுகின்றாய்? என சுவிசேஷகன் கேட்டதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

5. **"நன்றுநன் றுன்னிலை**
**"நாச தேசத்து நின்றுநின் றித்துணை தாழ்த்த னீதியோ"**
**"பொன்றிடர் வருமுனம் புகலிடம் பெறச்**
**சென்றிடா திவணுழல் சிந்தை யென்"**

யாரால் :- சுவிசேஷகனால் / நற்செய்தியாளனால்
யாருக்கு :- ஆன்மீகனுக்கு / ஆத்தும விசாரிக்கு
சந்தர்ப்பம் :- பாவகர்மிகள் கூடியிருக்கின்ற அக்கினிக் கடற்கிடங்கில் என்னை மறுமையில் அமிழ்த்தும் என்றும் பூலோகத்தந்தை நீதிமன்னன் தண்டனைக்குப் பயன்படுகிறேன் என்ற சிந்தனைகள் என்மனதில் ஊன்றியிருக்கின்றன என ஆத்மவிசாரி கூறியபோது.

6. **"உய்வழி யிது விதென் றுழறும் பல்வழி**
**பொய்வழி யவ்வழி போகு வேனல்லன்..."**

**"தெய்வநா யகன் திரு நகர்க்குச் செல்வழி**
**எவ்வழ் யவ்வழி யின்னும் தேர்கிலேன்"**

**"ஆதியான் றிருநக ரடுக்குஞ் ஜீவநற்**
**பாதைநீ யறிதியேற் பகர்தி..."**

யாரால் :- ஆத்துமவிசாரியால் / ஆன்மீகனால்
யாருக்கு :- நற்செய்தியாளனுக்கு / சுவிசேஷகனுக்கு
சந்தர்ப்பம் :- நாச தேசத்தில் இவ்வளவு தாமதித்து நிற்றல் நீதியோ? கொல்லத்தக்க துன்பம் வருமுன்னர் அடைக்கல இடத்தைத் தேடிச் சென்றிடாமல் இங்கு சுற்றித்திரிகின்ற சிந்தை எவ்வாறானது எனச் சுவிசேஷகன் கேட்டதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

7. **"ஓதுவல் கேட்டியென் றுரைத்தன் மேயிலான்"**

யாரால் :- சுவிசேஷகனால் / நற்செய்தியாளனால்
யாருக்கு :- ஆத்துவிசாரிக்கு / ஆன்மீகனுக்கு
சந்தர்ப்பம் :- ஆதியான் திருநகர்க்குச் செல்லும் ஜீவபாதையை நீ அறிந்தாயானால் அதை எனக்குச் சொல்லென ஆத்துமவிசாரி கேட்டதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

## 11. அறிவுடை நம்பி

1. **"ஐயா எங்கள் இருவருக்கும் ஒரு வழக்கு பெரியவராகிய உங்களிடம் நல்ல தீர்ப்பை நாடி வந்தோம்."**

யாரால் :- முதியவரான பூங்குன்றனால்
யாருக்கு :- ஊர்ப் பெரியவர் நன்னனுக்கு
சந்தர்ப்பம் :- முதியவர்களான பூங்குன்றனும், இளநாகனும் நன்னனின் இல்லத்துள் நுழைந்தபோது கூறியது.

2. **"வாருங்கள், வாருங்கள், அந்த இருக்கையில் அமருங்கள்"**

யாரால் :- ஊர்ப் பெரியவர் நன்னனால்
யாருக்கு :- பூங்குன்றனுக்கும், இளநாகனுக்கும்

சந்தர்ப்பம் :- முதியவர் இருவரும் ஐயா எங்கள் இருவருக்கும் ஒரு வழக்கு பெரியவராகிய உங்களிடம் நல்லதீர்ப்பை நாடி வந்தோம் எனக் கூறியபோது.

3. **"ஐயா! என் மகளுக்கு திருமணம் செய்ய நினைத்தேன் அதற்குப் பொருள் தேவைப்பட்டது. எந் நிலத்தை இவருக்கு நூறு பொற்காசுகளுக்கு விற்றேன்"**

யாரால் :- பூங்குன்றனால்
யாருக்கு :- ஊர்ப்பெரியவர் நன்னனுக்கு / நன்னனுக்கு
சந்தர்ப்பம் :- இந்த ஊரில் உள்ள யாராலும் இந்த வழக்கைத் தீர்க்க முடியவில்லை. எல்லோருமே உங்களிடம் சென்றால் நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என்று வந்தோம். புதையல் யாருக்கு என்பதுதான் வழக்கு எனக் கூறியபோது புதையலில் உரிமையா? உங்கள் வழக்கை விளக்கமாகக் கூறுங்கள் என நன்னன் கூறியபோது..

4. **"ஐயா! என் மகன் உழைத்துப் பொருளீட்ட வேண்டும் என்பதற்காக இவன் நிலத்தை வாங்கினேன்"**

**"அந்த நிலத்தை உழும்போது இந்தப் புதையல் எனக்குக் கிடைத்தது"**

யாரால் :- இளநாகனால் / முதியவரான இளநாகனால்
யாருக்கு :- ஊர்ப்பெரியவர் நன்னனுக்கு / நன்னனுக்கு
சந்தர்ப்பம் :- எனது மகளுக்குத் திருமணம் செய்ய நினைத்துப் பொருள் ஈட்டுவதற்காக நிலத்தை இவருக்கு நூறு பொற்காசுகளுக்கு விற்றேன் எனப் பூங்குன்றன் கூறியபோது.

5. **"..நிலத்தில் எனக்கு உரிமை இல்லாதபோது அதில் கிடைத்த புதையல் எனக்கு எப்படி உரிமையாக முடியும்...."**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- நன்னனுக்கு

சந்தர்ப்பம் :- ஏன் இந்தப் புதையலை வாங்க மறுக்கிறீர் எனக் கேட்டபோது.

6. **“......இவர்தான் புதையல் வேண்டாம் என்கிறாரே நீங்களே புதையலை வைத்துக் கொள்ள வேண்டியதுதானே”**

யாரால் :- நன்னனால் / ஊர்ப்பெரியவர் நன்னனால்

யாருக்கு :- இளநாகருக்கு

சந்தர்ப்பம் :- நிலத்தில் எனக்கு உரிமை இல்லாத போது அதில் கிடைத்த புதையலை எனக்கு எப்படி உரிமையாக முடியும் என பூங்குன்றனார் மறுத்துக் கூறியபோது.

7. **“நான் எடுத்துக் கொள்வது நேர்மையாகாது. என் உள்ளமே என்னைக் குறை சொல்லாதா?”**

யாரால் :- இளநாகனால்

யாருக்கு :- நன்னனுக்கு

சந்தர்ப்பம் :- இவர் தான் புதையலை வேண்டாம் என்கிறாரே நீங்கள் புதையலை வைத்துக் கொள்ள வேண்டியது தானே என நன்னன் கூறியதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

8. **“ஐயா! உங்களிடம் நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று வந்தேன். இப்படி ஒரு பக்கமாகப் பேசுகிறீர்களே.”**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- நன்னனுக்கு

சந்தர்ப்பம் :- புதையல் உமக்கே உரியது என்று இளநாகர் சொல்லிவிட்டார். எனக்கும் அது உடன்பாடாகத்தான் தெரிகிறது புதையலை நீர் பெற்றுக் கொள்வதுதான் முறை எனக் கூறியபோது.

9. **"...எனக்கும் அது உடன் பாடாகத்தான் தெரிகிறது..."**

யாரால் :- நன்னனால்
யாருக்கு :- பூங்குன்றனுக்கு
சந்தர்ப்பம் :- இளநாகன் புதையலை தான் எடுத்துக்கொள்வது நேர்மை ஆகாது. என் உள்ளமே என்னைக் குறை சொல்லாதா? எனக் கூறியபோது.

10. **"என்ன ஒரு பக்கமாய்ப் பேசுகிறேனா? நான் சொல்வதில் என்ன தவறு?"**

யாரால் :- நன்னனால்
யாருக்கு :- பூங்குன்றனுக்கு
சந்தர்ப்பம் :- உங்களிடம் நல்லதீர்ப்புக் கிடைக்கும் என்று வந்தேன். இப்படி ஒருபக்கமாகப் பேசுகிறீர்களே எனக் கூறியபோது.

11. **"...இந்தப் புதையலை நான் ஏற்றுக்கொண்டால் பிறர் பொருளைக் கவர்ந்த கள்வன் ஆவேன்"**

யாரால் :- இளநாகன்
யாருக்கு :- நன்னனுக்கு
சந்தர்ப்பம் :- நிலத்தில் கிடைத்த பயனாகத்தான் புதையலை எடுத்துக் கொள்ளவேண்டும் எனவே நான் புதையலைப் பெற்றுக் கொள்ள மாட்டேன் எனப் பூங்குன்றனார் கூறியபோது.

12. **"புதையலிலேயே உரிமை இல்லாதபோது அதில் பாதிபெறுவது எப்படி முறை ஆகும்?"**

யாரால் :- பூங்குன்றனால்
யாருக்கு :- நன்னனுக்கு
சந்தர்ப்பம் :- நீங்கள் இருவரும் இந்தப் புதையலைச் சமமாகப் பிரித்துக் கொள்ளுங்கள் எனக் கூறியபோது.

13. **"பல இடங்களில் அலைந்து உங்களிடம் வந்தோம் உங்களால் தீர்ப்பு வழங்கமுடியவில்லையே. இனி நாங்கள் எங்கு செல்வோம்."**

யாரால் :- இளநாகன்

யாருக்கு :- நன்னனுக்கு

சந்தர்ப்பம் :- உங்கள் வழக்கு குழப்பமான வழக்கு. புதையல் யாருக்கு உரியது என்று என்னால் தீர்ப்பு வழங்க முடியவில்லை எனக் கூறியபோது.

14. **"அரசே! வாழி! வழக்கை எடுத்துரைப்பதற்காகப் புதையல் குடத்துடன் இரண்டு முதியவர்கள் காத்திருக்கின்றனர்"**

யாரால் :- காவலனால் / அரசவை காவலனால்

யாருக்கு :- திருமாவளவனுக்கு

சந்தர்ப்பம் :- பத்து வயதுச் சிறுவன் திருமாவளவன் அரசவையில் அமர்ந்து இருந்தபோது, காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து கூறியது.

15. **"குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப்போகிறான் "**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- இளநாகனுக்கு

சந்தர்ப்பம் :- புதையல் குடத்துடன் அரசவையுள் நுழைந்தபோது சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியுடன் கூறியது.

16. **"அரசே! அவர்கள் வழக்கை விசாரிக்காமலேயே திருப்பி அனுப்பி விட்டீர்களே. காரணம் ஏதும் விளங்கவில்லையே. "**

யாரால் :- அமைச்சனால்

யாருக்கு :- திருமாவளவனுக்கு

சந்தர்ப்பம் :- அனுபவம் நிறைந்த கிழவரான அறிவுடைநம்பி இந்த அரியணையில் அமர்ந்திருப்பார். உங்கள் வழக்குக்கு நல்ல தீர்ப்புக் கிடைக்கும் எனக் கூறிய பின் இருவரும் மாலையில் இங்கு வருவதாகக் கூறிச் சென்றபின் கேட்டது.

17. **"என்ன? அரசர் சொன்ன அந்த நீதிபதி இன்னும் வரவில்லையே"**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- இளநாகனுக்கு

சந்தர்ப்பம் :- அரசவையில் அவையினர் ஆசனங்களில் அமர்ந்திருக்க, முதியவர்கள் இருவரும் நின்று கொண்டிருந்த போது கூறியது.

18. **"அனுபவம் வாய்ந்த முதியவராகக் காட்சி அளிக்கிறார்"**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- இளநாகனுக்கு

சந்தர்ப்பம் :- தள்ளாடித்தள்ளாடி மெல்ல நடந்து முதியவர் ஒருவர் அரியணையில் அமர்கிறார் எல்லோரும் எழுந்து நின்று அவர் அமர்ந்த பின் அமர்ந்தபோது கூறியது.

19. **"அவர் முகத்தில் அறிவொளி வீசுகிறது. நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என்றே நம்புகிறேன்."**

யாரால் :- இளநாகனால்

யாருக்கு :- பூங்குன்றனுக்கு

சந்தர்ப்பம் :- அரியணையில் முதியவர் ஒருவர் வந்து அமர்ந்திருந்தபோது கூறியது.

20. **"ஐயா! என் மகன் தானே உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்பதற்காக இந்த நிலத்தை வாங்கினேன்."**

யாரால் :- இளநாகனால்

யாருக்கு :- அறிவுடைநம்பிக்கு

சந்தர்ப்பம் :- பூங்குன்றன் தனக்கு இப் புதையலில் உரிமை இல்லை எனக் கூறியபோது, பதிலாகக் கூறியது.

21. **"உங்கள் மகளுக்கும் இவர் மகனுக்கும் திருமணம் செய்து வையுங்கள். திருமணப் பரிசாக இந்தப் புதையலை அவர்களுக்கு வழங்கி விடுங்கள்"**

யாரால் :- அறிவுடைநம்பியால்

யாருக்கு :- பூங்குன்றனுக்கு

சந்தர்ப்பம் :- உயர்ந்த பண்புடைய நீங்கள் இருவரும் உறவினர்கள் ஆனால் என்ன எனக் கூறியபோது, விளங்கவில்லை எனக் கூறியதற்குப் பதிலாகக் கூறப்பட்டது.

22. **"ஐயா! அகவை முதிர்ந்து எத்தனையோ வழக்குகளைக் கண்ட உங்களால் தான் நல்ல தீர்ப்பு வழங்க முடிந்தது"**

யாரால் :- பூங்குன்றனால்

யாருக்கு :- அறிவுடைநம்பிக்கு

சந்தர்ப்பம் :- பிள்ளைகளுக்கு திருமணம் செய்து புதையலைத் திருமணப் பரிசாக அவர்களுக்கு வழங்கிவிடுங்கள் எனத் தீர்ப்பை வழங்கியபோது, ஏற்றுக்கொண்டு கூறியது.

23. ***"முதுமை அடைய அடைய அறிவுக் கூர்மை அதிகமாகிறது எங்கள் கருத்து உங்களால் உண்மை ஆயிற்று"***

யாரால் :- இளநாகனால்
யாருக்கு :- அறிவுடைநம்பிக்கு
சந்தர்ப்பம் :- தீர்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டபின் கூறியது.

24. ***"அரசே நீங்கள் யாராலும் தீர்ப்பு வழங்க இயலாத சிக்கலான வழக்கிற்குத் தீர்ப்பு வழங்கினீர்கள்."***

யாரால் :- பூங்குன்றனால்
யாருக்கு :- திருமாவளவனுக்கு
சந்தர்ப்பம் :- அறிவுடைநம்பி தாடி, மீசையை அகற்றியபோது, சிறுவனைக் கண்டு கூறியது.

25. ***"அரசே! எங்களை மன்னியுங்கள் அறிவுக் கூர்மைக்கும் வயதுக்கும் தொடர்பில்லை..." "எங்கள் அறிவுக் கண்கள் திறந்தன...."***

யாரால் :- பூங்குன்றனால்
யாருக்கு :- திருமாவளவனுக்கு
சந்தர்ப்பம் :- சிறுவனால் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும் என நீங்கள் ஐயம் கொண்டதை முகக் குறிப்பினால் உணர்ந்தேன் அதனால் இந்தத் தள்ளாடும் முதியவேடம் எனக் கூறியபோது.

# 12. மணிமேகலை

1. **"நானும் மணிமேகலைக்குத் துணையாகச் செல்வேன்"**

யாரால் : சுதமதியால்

யாருக்கு : மாதவிக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையைத் தனியே மலர்வனத்திற்கு அனுப்பலாகாது எனக் கூறியபோது.

2. ***"மற்றொரு சமயம் பார்ப்பேன்"***

யாரால் : உதயகுமரனால்

யாருக்கு : தனக்குத்தானே

சந்தர்ப்பம் : பளிங்கறையினுள் இருந்த மணிமேகலை உருவத்தைத் தெரிந்து கொண்டபின் எண்ணியது.

3. ***"மணிமேகலை இனித் தவநெறியில் செல்வாள், அவளை நீ விரும்பாதே"***

யாரால் : மணிமேகலா தெய்வத்தால்

யாருக்கு : உதய குமரனுக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையை மயக்கி ஆகாய வழியே கொண்டு சென்று மணிபல்லவம் என்னும் தீவில் வைத்த பின்பு அரண்மனைக்கு வந்து கூறியது.

4. **“இனி மணிமேகலை பௌத்த நெறியில் செல்வாள். இப்போது அவளை மணிபல்லவத் தீவில் வைத்திருக்கிறேன்”**

யாரால் : மணிமேகலா தெய்வத்தால்

யாருக்கு : சுதமதிக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையை மயக்கி ஆகாய வழியே கொண்டு சென்று மணிபல்லவம் என்னும் தீவில் வைத்த பின்பு அரண்மனைக்கு வந்து உதயகுமரனுக்குக் கூறிய பின்பு கூறியது.

5. **“.... கோவலன் தங்கள் குலதெய்வமாகிய என் பெயரையே தன் குழந்தைக்கு இட்டான்.”**

யாரால் : மணிமேகலா தெய்வத்தால்

யாருக்கு : சுதமதிக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையை மயக்கி ஆகாய வழியே கொண்டு சென்று மணிபல்லவம் என்னும் தீவில் வைத்த பின்பு சுதமதியை எழுப்பிக் கூறியது.

6. **“........ ஏழாம் நாள் மணிமேகலை இங்கு வருவாள். உங்கள் முற்பிறப்பை அவள் அறிந்து வருவாள்”**

யாரால் : தூணிலுள்ள பாவையால்

யாருக்கு : சுதமதிக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையை மணிபல்லவத் தீவில் வைத்திருப்பதையும் கோவலன் தங்கள் குலதெய்வமாகிய என் பெயரையே குழந்தைக்கு வைத்தான் எனவும் மணிமேகலைத் தெய்வம் கூறியதைக் கேட்ட சுதமதி வனத்தை நீங்கி சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தபோது சொல்லியது.

7. **“இராகுலனே உதய குமரனாகப் பிறந்திருக்கிறான்.”**

**“நீ சமய வாதிகளுடைய கொள்கைகளை அறிய வேண்டும். உன் இளமைக் கோலம் இருந்தால் பிறர் உனக்குச் சமய உண்மைகளைச் சொல்லார்”**

யாரால் : மணிமேகலா தெய்வத்தால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : மணிபல்லவத்தில் கொண்டுசென்று விடப்பட்ட மணிமேகலை கண் விழித்து புத்தபீடியை வணங்கிப் பழம்பிறப்பு உணர்ந்து நின்றபோது கூறியது.

8. **“இப் பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்ய வேண்டும்”**

யாரால் : தீவதிலகையால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : மணிபல்லவத்தில் தீவதிலகை, மணிமேகலையைக் கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றபோது அமுதசுரபி என்ற அட்சய பாத்திரம் மணிமேகலையின் கையை அடைந்தபோது கூறியது.

9. **“அமுத சுரபியைக் கொண்டு மக்களுடைய பசியைப் போக்குவாயாக”**

யாரால் : அறவண அடிகளால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : சுதமதி, மாதவி என்போரின் முற்பிறப்பையும் அமுதசுரபியின் தன்மையையும் கூறிய மணிமேகலை அவர்களை அழைத்துக்கொண்டு அறவண அடிகளைத் தரிசித்தபோது கூறியது.

10. "முற்பிறப்பில் இலக்குமியாகிய நீயும் இராகுலனாகிய உன் கணவனும் ஒரு முனிவருக்கு உணவளிக்கப் புக்கபோது, அடிசிலாக்குவான் தாமதித்து வந்து தரையில் வழுக்கிவிழுந்து உணவைச்சிந்திவிட, அது கண்ட இராகுலன் கோபித்து வெட்டி வீழ்த்தினான். அப்பாவத்தால் அவன் அப்பிறப்பில் திட்டிவிடம் எனும் பாம்பு கடித்து இறந்தான். இப்பிறப்பிலும் வெட்டுண்டு வீழ்ந்தான். உதயகுமரனை நீ நினைக்காதே"

யாரால் : கந்திற் பாவை என்ற தெய்வத்தால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலையிடம் காதல் உரைத்த உதயகுமரன் வாளால் வெட்டப்பட்டு இறந்தமைக்காக மணிமேகலை வருந்தியபோது கூறியது.

11. "............ நீ இனி பல சமயவாதிகளின் கருத்துக்களை நன்கு தெரிந்து கொண்டு இறுதியில் பௌத்த சமயத்தைப் பின்பற்றி ஒழுகுவாயாக"

யாரால் : கண்ணகித் தெய்வத்தால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : வஞ்சிமாநகரம் அடைந்த மணிமேகலை கண்ணகிக் கோட்டம் சென்று வணங்கியபோது கூறியது.

12. "உன் மனத்திருள் நீங்குக"

யாரால் : அறவண அடிகளால்

யாருக்கு : மணிமேகலைக்கு

சந்தர்ப்பம் : மணிமேகலை தன் கையிலிருந்த அமுதசுரபியால் எல்லா உயிர்களுக்கும் உணவளித்துப் பசிப்பிணி போக்கி அறவண அடிகளை வணங்கி உபதேசம் கேட்டபோது.

# இப்பொழுது வெளிவந்துவிட்டது

அரச புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள நூல்கள்.

1. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 6
2. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 7
3. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 8
4. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 9

5. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 10
6. தமிழ்மொழியும் இலக்கியமும் பொழிப்பு தரம் 10
7. தமிழ்மொழியும் இலக்கியமும் வினாவிடை தரம் 10
8. தமிழ்மொழியும் இலக்கியமும் சந்தர்ப்பம்கூறல் தரம் 10

9. தமிழ்மொழியும் இலக்கியமும் செயல்நூல் தரம் 11
10. தமிழ்மொழியும் இலக்கியமும் பொழிப்பு தரம் 11
11. தமிழ்மொழியும் இலக்கியமும் வினாவிடை தரம் 11
12. தமிழ்மொழியும் இலக்கியமும் சந்தர்ப்பம்கூறல் தரம் 11

13. தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி 1 வினாவிடை தரம் 10,11
14. தமிழ் இலக்கியம் (விருப்பத்திற்குரியது) வினாவிடை தரம் 10,11

IMAGE N' PRINT